***Tamilmanam International Research Journal of Tamil Studies***
*An international, peer-reviewed monthly academic research journal*

ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026**, **p445-455** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed*

# குறுந்தொகையில் வழிபாட்டுத் தொன்மங்கள்

*Worship Myths in Kuruntokai*

**முனைவர் மெ. ரேவதி,**

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவுப் பெற்றது), திருச்சிராப்பள்ளி – 02

மின்னஞ்சல்: revathim@sigc.edu, தொலைபேசி: 7402087242

**Dr. M. REVATHI*,**

*Assistant professor, Department of Tamil, Shrimati Indira Gandhi College, (Affiliated with Bharathidasan University), Tiruchirappalli-2, Tamil Nadu, India.*
*Email: : revathim@sigc.edu*

***Article history***
Received: 20-08-2026
Revised: 01-09-2026
Accepted: **08-09-2026**
Published on: **10-09-2026**

*Corresponding Author
Email:revathim@sigc.edu

**Abstract:**

Sangam literature serves as primary evidence reflecting the lifestyle and culture of the ancient Tamils. Kuruntokai, one of the love-themed anthologies of the Ettuthokai (Eight Anthologies), not only expresses the emotions of people within love conventions (Akapporul) but also records rare historical data regarding the religion, rituals, worship methods, and mythical beliefs of ancient Tamils. This article comprehensively examines the worship myths of deities featured in Kuruntokai against the background of the etymological growth of the term "Myth," the grammatical definitions in Tolkappiyam, and scholarly explanations. This study presents detailed evidence structured under four major divisions: the myth of Lord Murugan (god of the Kurinji landscape) destroying the Avunas (demons), references to Kollipavai, natural worship practices such as crescent moon adoration rituals, and valor-based hero stone (Nadukal) worship.

**Keywords:** *Kuruntokai - Myth - Sangam Literature Religion - Murugan Avuna Vatham - Kollipavai - Crescent Moon Worship - Hero Stone Tradition - Landscape Deities (Tinai Teyvangkal).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.34**

### ஆய்வுச் சுருக்கம் (Abstract)

பண்டையத் தமிழரின் வாழ்வியலையும் பண்பாட்டையும் பிரதிபலிக்கும் முதன்மைச் சான்றுகளாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. எட்டுத்தொகை அகநூல்களுள் ஒன்றாக விளங்கும் குறுந்தொகை அகப்பொருள் சார்ந்த மாந்தர்களின் உணர்வுகளைக் கூறுவதோடு மட்டுமன்றி, பண்டைத் தமிழர்களின் சமயம், சடங்குகள், வழிபாட்டு முறைகள் மற்றும் தொன்ம நம்பிக்கைகள் குறித்த அரிய வரலாற்றுத் தரவுகளையும் பதிவு செய்துள்ளது. இக்கட்டுரை, தொன்மம் (Myth) என்பதன் சொல்லிலக்கண வளர்ச்சி, தொல்காப்பிய இலக்கண வரையறைகள், அறிஞர்களின் விளக்கங்கள் ஆகியவற்றின் பின்னணியில், குறுந்தொகையில் இடம்பெறும் கடவுள் வழிபாட்டுத் தொன்மங்களை முழுமையாக ஆராய்கிறது. குறிஞ்சி நிலக் கடவுளான முருகனின் அவுணர் வதத் தொன்மம், கொல்லிப்பாவைச் செய்திகள், இயற்கை வழிபாடான பிறை வணக்கச் சடங்குகள் மற்றும் வீரம் சார்ந்த நடுகல் வழிபாடு ஆகிய நான்கு பிரிவுகளின்கீழ் சான்றுகளுடன் இவ்வாய்வு விரிவாக முன்வைக்கப்படுகிறது.

### திறவுச்சொற்கள் (Keywords)

குறுந்தொகை - தொன்மம் (Myth) - சங்க இலக்கிய சமயம் - முருகன் அவுணர் வதம் - கொல்லிப்பாவை - பிறை வழிபாடு - நடுகல் மரபு - திணைத் தெய்வங்கள்.

### முன்னுரை

பண்டையத் தமிழரின் சமூக, அரசியல், வழிபாட்டு வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகச் சங்க இலக்கியங்கள் மிளிர்கின்றன. அவற்றுள் சிறப்பு வாய்ந்த நூலாக விளங்குவது குறுந்தொகை ஆகும். இது எட்டுத்தொகையில் இடம் பெறும் அகநூல்களுள் ஒன்றாகும். அகப்பொருள் பாடல்கள் பாடப்பெற்ற போதிலும், புலவர்கள் தம் கூற்றுகளுக்கும் உவமைகளுக்கும் பின்னணியாக மக்கள் மத்தியில் வழங்கிவந்த சமய நம்பிக்கைகளையும், சடங்கு முறைகளையும், தெய்வங்களைப் பற்றிய கதையாடல்களையும் 'தொன்மங்களாகப்' பரவலாகப் பயன்படுத்தியுள்ளனர். இக்கட்டுரை குறுந்தொகையில் அமைந்த கடவுள் மற்றும் வழிபாடு சார்ந்த தொன்மங்களைச் சமூகவியல் மற்றும் நிலவியல் கண்ணோட்டத்தில் விரிவாகச் சான்றுகளுடன் ஆராய்கிறது.

| Copyright © Author(s)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.34**

**தொன்மம் – சொற்பொருள் விளக்கம்**




'Myth' (மித்) என்ற ஆங்கிலச் சொல் 'Mythos' என்ற கிரேக்கச் சொல்லின் வேர்ச்சொல்லாகும். அதற்கு நிகரான தமிழ்ச்சொல்லாக 'தொன்மம்' கையாண்டு வரப்படுகிறது.'தொன்மம்' (Myth) என்னும் சொல் 'பழமை' என்ற பொருளைக் குறிப்பதாகும். அகராதிகள் தொன்மம் என்பதற்குப் *பழமை* என்றும், செய்யுளில் இடம்பெறும் எண்வகை வனப்புகளில் ஒன்று என்றும் பொருள் தருகின்றன.

பொதுவாகத் தொன்மம் எனப்படுவது பண்டைய மக்களின் சமயம், பழக்கவழக்கங்கள், வரலாற்றுக் குறிப்புகள், கலைகள் போன்ற வாழ்க்கை சார்ந்த நம்பிக்கைகளையும் சடங்கு முறைகளையும் குறிப்பதாகும்.

தமிழில் 'வீரம்' என்பதற்கு நிகரான சொல்லாகப் 'பெருமிதம்' என்பதனைப் பழந்தமிழர்கள் பயன்படுத்தியது போல, 'புராணம்' என்பதற்கு இணையான தமிழ்ச்சொல்லாகத் 'தொன்மை' என்ற சொல் தொல்காப்பியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்கிறார் யாழ். சு. சந்திரா.

தொன்மமானது மனத்தின் விழிப்புநிலையில் ஆழ்மனத்தில் கருப்பெறுகின்றது. நம்மைக் கேட்காமலேயே உடல் வளர்வதைப் போலவே இயற்கையாகவே தொன்மங்கள் உரம்

| Copyright © Author(s)

**Article DOI:** https://doi.org/10.63300/tm12042026.34

பெறுகின்றன என்று கதிர் மகாதேவன் குறிப்பிடுகின்றார்.

தொன்மம் என்பது புனிதமான உண்மை (Sacred True). மேலும், தொன்மம் செயல்பாட்டின் அடிப்படையில் சடங்குகளுடனும் சமயங்களுடனும் தொடர்புடைய சமுதாயம் சார்ந்த கதை என்கிறது அமெரிக்கானா கலைக்களஞ்சியம் (Encyclopedia Americana).

**தொன்மமும் பழமரபுக் கதையும்**

கடவுள் பற்றியும் உயர்மனிதர்கள் பற்றியும் அமைந்த செய்திகள் தொன்மத்தில் அடங்கும்.தொன்மமும் பழமரபுக் கதைகளும் ஒன்றுமையுடையனவாக இருப்பினும், அவற்றிற்கு இடையே தெளிவான வேறுபாடுகள் உண்டு**.** தொன்மம் என்பது கடவுளரின் செயல்களையும், சமயம் சார்ந்த புராண நிகழ்வுகளையும், சடங்குகளையும் முதன்மைப்படுத்தி விரித்துரைப்பது; பழமரபுக் கதைகள் என்பது மானுடவியல் சார்ந்த மனிதர்களை முதன்மைப்படுத்துவதாகும்.

**தொல்காப்பியம் தரும் விளக்கம்**

தமிழின் முதன்மை இலக்கண நூலான தொல்காப்பியம் தொன்மத்திற்குப் பின்வருமாறு இலக்கணம் வகுத்துக் காட்டுகிறது.

**"தொன்மை தானே சொல்லுங் காலை**
**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" - (தொல். செய். நூ.எண். 538)**

தொன்மம் என்பது தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள செய்யுளின் எண்வகை வனப்புகளில் (அழகு) ஒன்றாகும்.

இதற்கு, உரையாசிரியரான இளம்பூரணர், "தொன்மை எனப்படுவது, உரையோடு கூடிய பழமையாகிய கதைப்பொருளில் வருவது" என்று விளக்கமளித்துள்ளார். மேலும், நிலம் சார்ந்த முதற்பொருளைப் பற்றிக் கூற விளைந்த தொல்காப்பியர், தமிழ்நாட்டின் நான்கு நிலங்களுக்கும் உரிய தெய்வத் தொன்மங்களைப் பின்வரும் நூற்பா வாயிலாகப் பதிவு செய்வதை,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" - (தொல்.அகத். நூ.எண். 5)**

என்ற நூற்பாவழி, காடும் காடு சார்ந்த நிலமான முல்லைநிலத் தெய்வம் மாயோன் எனப்படும் திருமால். மலையும் மலை சார்ந்த நிலமான குறிஞ்சி நிலத்தின் தெய்வம் சேயோன் ஆகிய முருகன். மருத நிலமான வயலும் வயல் சார்ந்த பகுதிக்குத் தெய்வம் இந்திரன். கடலும் கடல் சார்ந்த பகுதியுமான நெய்தல் நிலத்திற்குத் தெய்வம் வருணன் என்பதைத் தெரிந்துகொள்ளமுடிகின்றது.

**குறுந்தொகையில் வழிபாட்டுத் தொன்மங்கள்**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகையில் இடம்பெறும் கடவுளர் மற்றும் வழிபாடு சார்ந்த தொன்மங்களை நான்குப் பிரிவுகளாக வகுக்கலாம். அவை,

1. முருகன் பற்றிய தொன்மம்
2. கொல்லிப்பாவை பற்றிய செய்திகள்
3. இயற்கை வழிபாடு (பிறை வழிபாடு)
4. நடுகல் வழிபாடு

**முருகன் பற்றிய தொன்மமும் புராணச் சான்றுகளும்**

"சேயோன் மேய மைவரை உலகம்" என்று தொல்காப்பியம் செப்புவதிலிருந்து குறிஞ்சிநிலக் கடவுளாக முருகன் திகழ்ந்தான் என்பது வெளிப்படை. குறுந்தொகைப் பாடல்களில் முருகன் அசுரர்களை (அவுணர்களை) அழித்தப் புராணச் செய்திகள் அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**"செங்களம் படக்கொன்று அவுணர் தேய்த்த**
**செங்கோ லம்பின் செங்கோட்டி யானை**
**கழல்தொடிச் சேஎய் குன்றம்" - (குறுந்.பா. எண்.1)**

இப்பாடல் வரிகள், முருகன் போர்க்களத்தில் அவுணர்களை வதம் செய்த வீர நிகழ்வை எடுத்துரைக்கின்றன. இதேபோல முருகன் சூரபத்மனை வதம் செய்த நிகழ்வும் குறிக்கப்படுகிறது. இத்தொன்மச் செய்திகள் பிற சங்க நூல்களிலும் இடம்பெறுவதை,

**“அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்**
**மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து"**

எனத் திருமுருகாற்றுப்படையும்

**“பாய்இரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு**
**சேயுயர் பிணிமுகம் ஊர்ந்து அமர்உழக்கி**
**தீஅழல் துவைப்ப திரிய விட்டெறிந்து**
**நோயுடை நுடங்கு சூர்மா முதல்தடிந்து**

**.... .... .... ....**

**மாய அவுணர் மருங்குஅறத் தபுத்த வேல்"**

என பரிபாடலும் எடுத்துரைப்பதன்மூலம் அறியமுடிகின்றது. மேலும், இச்செய்தினைப் பிற்காலத்தில் கந்தபுராணத்திலும் காண முடிகிறது. சங்க காலத்தில் பழங்குடித் தெய்வமாக இருந்த முருகன்,அசுரர்களை அழிக்கும் வீரம் கொண்ட புராண நாயகனாக மா ற்றம் பெற்ற தொன்ம வளர்ச்சியை இச்சான்றுகள் புலப்படுத்துகின்றன.

**கொல்லிப்பாவையும் அச்ச வழிபாடும்**




மலையின் ஒரு பகுதியில் அமைந்த 'அணங்கு' போன்ற பெண் தெய்வம் அல்லது தெய்வத்தால் வரையப்பட்ட பாவையே கொல்லிப்பாவை எனப்படும். சேர மன்னனின் கொல்லிமலையின் மேற்குப் பகுதியில் (குடவரை) அச்சம் தரக்கூடிய கொல்லித் தெய்வம் அமைந்திருந்ததை குறுந்தொகைப் பாடல்கள் உணர்த்துகின்றன.

**" பெரும்பூண் பொறையன் பேமுதிர் கொல்லிக்**
**கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய**
**நல்லியற் பாவை" - (குறுந்.பா. எண்.89)**

கொல்லிப்பாவை பற்றிய தொன்மம் பிற பாடல்களிலும் எடுத்தாளப்பட்டுள்ளதை,

| Copyright © Author(s)

**"வல்வில் ஓரி கொல்லிக் குடவரை பாவையின்..."**

**".... .... பயங்கெழு பலவின்**

**கொல்லிக் குடவரை பூதம் புணர்த்த**

**புதியியல் பாவை"**

இப்பாடலடிகள்வழிக் காணமுடிகிறது. கொல்லிமலையின் மேற்குப் புறத்தில் தெய்வத்தாலோ அல்லது பூதத்தாலோ அமைக்கப்பட்ட ஓவியப் பாவை பற்றிய செய்தி,

**"பொறையன் உரைசால் உயர்விரைக் கொல்லிக்**

**குடவயின் ........ ....... .......**

**நெடுவரைத் தெய்வம் எழுதிய**

**வினைமாண் பாவை"**

என்ற பாடலடிகள் பழம்தமிழரின் 'அச்சம் சார்ந்த வழிபாட்டுத் தொன்மத்திற்கு' (Fear-based Ritualism) மிகச்சிறந்த சான்றுகளாகும்.

**இயற்கை வழிபாடும் பிறை வணக்கமும்**

பண்டையத் தமிழர்கள் இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சி வாழ்ந்தனர். அதனால், அவ்வச்சத்தைப் போக்க எண்ணி இயற்கையோடு இயைந்து வாழ முற்பட்டனர். இதன் தொடர்ச்சியாகச் சங்ககால மக்களும் பெண்களும் பிறை நிலவைத் தெய்வமாகத் தொழுது வணங்கினர் என்பதைப் பின்வரும் குறுந்தொகைப் பாடல் தெளிவுபடுத்துகிறது.

**"செவ்வாய் வானத் தையெனத் தோன்றி**

**இன்னம் பிறந்தன்று பிறையே" - (குறுந். பா. எண். 307)**

இப்பாடலில் பிறையைப் பலசமயத்தோடும் தொழுதனர் என்ற செய்தி இடம் பெறுகிறது. மேலும் கன்னிப் பெண்களும் பிறையை வணங்கினர் என்பதை,

**"ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்**

**புல்லென் மாலை" – (அகம். 239)**

என்ற அகநானூற்று பாடலடிகளும்

**"குடமுதல் தோன்றிய தொன்று தொழுபிறையின்**

**வழிவழி சிறக்க நின்வலம்படு கொற்றம்"**

என்ற மதுரைக்காஞ்சி பாடலடிகளும் சான்று பகர்கின்றன.

சங்க காலத்தில் கன்னிப் பெண்கள் பிறைநிலவைத் தொழுது வணங்கியதற்கு, நல்ல

**Article DOI:** https://doi.org/10.63300/tm12042026.34

குணநலன்கள் கொண்ட கணவனைப் பெற்று இல்லறம் சிறக்க வேண்டும்; கரு வயிற்றில் உருவாக வேண்டும்; மழைவளம் பெற்று நாடு வளம் பொழிய வேண்டும் என்பன போன்ற சில முக்கிய நம்பிக்கைகள் காரணங்களாக அமைந்தன.

**நடுகல் வழிபாடும் தொன்ம மரபும்**




தம் நாட்டினைக் காக்கும் பொருட்டு, பகைவரோடு போரிட்டு வீரமரணம் எய்திய வீரனுக்காக எடுக்கப்படுவது 'நடுகல்' எனப்படும். இந்நடுகல்லில் இறந்துபட்ட வீரனின் பெயரும் பெருமையும் (பீடும்) பொறிக்கப்பட்டு, தெய்வமாக வழிபட்டு வந்ததை தொல்காப்பியர் காலம் தொட்டே அறிய முடிகிறது.

> **"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்**
> **சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தலென்று**
> **இருமூன்று மரபின் கல்லோடு புணர" - (தொல். புறத். நூ.எண். 63 )**

மறக்குடியில் பிறந்த அனைவரும் இந்நடுகல் வழிபாட்டைத் தம் இனத்திற்குரிய சிறந்த தெய்வ வழிபாடாகக் கொண்டு வாழ்ந்தனர். புறநானூற்றுப் பாடல் ஒன்று நடுகல்லைத் தவிர வேறு கடவுளைப் பழந்தமிழர் அறியார் என்பதனைப் பதிவு செய்வதை,

**"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லே பரவினல்லது**
**நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலமே"**

எனும் புறப்பாடல் சுட்டுகிறது. இத்தகு புகழ்வாய்ந்த நடுகல்லில் வீரரது பெயரும் பீடும் எழுதப்பட்டுப் பீலி சுட்டப்பட்டிருந்ததை,

**"நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலிசூட்டிய பிறங்குநிலை மறவர்"**

என்று அகநானூறும் புலப்படுத்துகிறது.

இவ்வாறு வீரனுக்காக நட்ட நடுகல்லிற்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையிலும், கௌரவிக்கும் வகையிலும் வீரர்கள் தங்களது கிடுகினையும் (கேடயம்) வேல்களையும் வரிசையாக நட்டு அரண் செய்த செய்தியை,

**"மாலைவேல் நட்டு வேலி ஆகும்"**
**"கிடுகுநிரைத் தெஃகூன்றி நடுகல்லின் அரண் போல"**

என்று குறுந்தொகையும் பட்டினப்பாலையும் உணர்த்துகின்றன:

**தொன்மங்களின் சமூகக் கட்டமைப்பு**

சங்க பாடல்களில் தொன்மங்கள் கதைகளாக மட்டுமன்றி, சமூகத்தின் கட்டமைப்புடனும் வழிபாட்டு மரபுகளுடனும் பிணைந்துள்ளன.

அக இலக்கியமான குறுந்தொகையில், தலைவன் பிரிந்த சூழலில் தலைவியின் மனநிலையை விவரிக்கவோ அல்லது அவளது அஞ்சும் இயல்பை விளக்கவோ கொல்லிப்பாவை, முருகன் வேலாட்டத் தொன்மங்கள் பயன்பட்டுள்ளன.

இயற்கையை ஆளும் சக்தியாகவும், வளத்தின் குறியீடாகவும் கருதி வழிபட்ட பிறை வழிபாடு, தமிழரின் சடங்குகளின் அங்கமாக மிளிர்ந்தது.

நடுகல் வழிபாடு என்பது இறந்துபோன முன்னோர்களைக் கடவுளாக மாற்றும் 'முன்னோர் வழிபாட்டின்' (Ancestor Worship) உன்னதமான வடிவமாகும்.

**முடிவுரை**

இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகள் வருமாறு,

- 'தொன்மம்' என்பதன் சொற்பொருள் விளக்கமும், 'Mythos' என்ற கிரேக்க வேர்ச்சொல் தொடர்பும், தொல்காப்பியம் 'தொன்மை' என்ற வனப்பிற்குத் தரும் இலக்கண வரைவிலக்கணமும் தெளிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன.
- முருக வழிபாடு பற்றியும், அவுணர்களை முருகன் அளித்த புராண நிகழ்வும் குறுந்தொகைப் பாடலில் இயம்பப்பட்டுள்ளது.
- கொல்லிப்பாவை, இயற்கை வழிபாடான பிறை வழிபாடு மற்றும் நடுகல் வழிபாடு போன்ற தொன்மச் செய்திகள் குறுந்தொகையின் ஆறுக்கும் மேற்பட்ட பாடல்களில் மிகத் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன.
- குறுந்தொகையில் கூறப்படும் வழிபாட்டுத் தொன்மங்கள் திருமுருகாற்றுப்படை, பரிபாடல், அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி ஆகிய பிற சங்க இலக்கியங்களோடு சான்றாதாரங்களுடன் ஒப்புநோக்கி உறுதி செய்யப்பட்டுள்ளன.

**துணைநூற் பட்டியல்**

1. சோம சுந்தரனார், பொ.வே. (உ..ஆ) குறுந்தொகை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி - 6,மறுபதிப்பு 1965.
2. சுப்பிரமணியன், ச.வே.சு., (உ..ஆ) பரிபாடல், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 18, 21ம் பதிப்பு, சூன் 2010
3. பின்னத்தூர் நாராயணசாமிப் பிள்ளை, (உ..ஆ), நற்றிணை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -1. நான்காம் பதிப்பு, 1967
4. மறைமலையடிகள், (உ..ஆ) பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை, மணிவாசகர் பதிப்பகம், 8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 18, மறுபதிப்பு, பிப்ரவரி 2001.
5. துரைசாமிப் பிள்ளை, சு., ஔவை (உ..ஆ)., புறநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை -1, பதினோறாம் பதிப்பு, 1999.
6. மணிவாசகன், ஞா., (உ..ஆ), பத்துப்பாட்டு, வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.அம் காம்ப்ளகஸ், 141, உஸ்மான்சாலை, தி.நகர், சென்னை 17, மு.ப.
7. இளம்பூரணர், (உ..ஆ) தொல்காப்பியம், பொருளதிகாரம், முல்லை நிலையம், 9, பாரதிநகர் முதல் தெரு, தி.நகர், சென்னை -17, மறுபதிப்பு, 2004.
8. சந்திரா, சு. யாழ்., தொன்மவியல் கட்டுரைகள், அறிவுப்பதிப்பகம், 142, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை 14, மு.ப. ஏப்ரல, 2009.

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.34**


9. சுதந்திரம், கோ, ப., பொதுச்சடங்குகளில் இலக்கியம். பாடுமீன் பதிப்பகம், பழைய எண். 16, புதிய எண். 32, முதல் தளம், இரண்டாம் தெரு, பாலாஜி நகர், இராயப்பேட்டை, சென்னை 14.
10. மகாதேவன், கதிர், தொன்மம், செல்லப்பா பதிப்பகம், 148, தானப்ப முதலி தெரு, மதுரை 625 001. மு.ப. டிசம்பர் 2008.
11. தட்சிணாமூர்த்தி, அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை - 40, மறுபதிப்பு, பிப்ரவரி 1999.
12. மோகனசுந்தரம், சி., (க.ஆ)., நடுகல் வழிபாடு, உதகை அரச கல்லூரி, (2008-09) ஆண்டு மலர்.


இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் ஆய்வு, தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு அல்லது பிரசுரம் தொடர்பான எந்தவொரு நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட அமைப்புகளுடனும் எந்தவிதமான நலன்சார் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என்று இதன்மூலம் உறுதியளிக்கிறார்.

*The author(s) declare that there is no conflict of interest — financial, personal, or otherwise — associated with the research, authorship, or publication of this article. The findings and conclusions presented here are the result of independent academic research and were not influenced by any external organization, funding body, or third party. No funding was received for the preparation of this manuscript.*

| Copyright © Author(s)